# இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

## தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - ஆறு - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 10 × 1 = 10

1. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ______________
   அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி
2. பிறரிடம் நான் ______________ பேசுவேன்.
   அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல் இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்
3. 'கதிர்ச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________
   அ) கதிரின் + சுடர் ஆ) கதிரவன் + சுடர் இ) கதிர் + சுடர் ஈ) கதிரோன் + சுடர்
4. 'உதித்த' என்ற சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ______________
   அ) மறைந்த ஆ) நிறைந்த இ) குறைந்த ஈ) தோன்றிய
5. அஞ்சும் சமர்களத்தில் வெளிப்படும் குணம் ______________
   அ) பயம் ஆ) துன்பம் இ) வீரம் ஈ) மகிழ்ச்சி
6. கதிர் முற்றியதும் ______________ செய்வர்.
   அ) அறுவடை ஆ) உரமிடுதல் இ) நடவு ஈ) களையெடுத்தல்
7. நிலையான செல்வம் ______________
   அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்
8. வீட்டு வாசலில் ______________ போட்டனர்.
   அ) கோலம் ஆ) கோளம் இ) கோழம் ஈ) கோணம்
9. பழையன கழிதலும் ______________ புகுதலும்
   அ) புதியன ஆ) புதுமை இ) புதிய ஈ) புதுமையான
10. ஆராயும் அறிவு உடையவர்கள் ______________ சொற்களைப் பேசமாட்டார்.
   அ) உயர்வான ஆ) பொருளில்லாத இ) பயன்தராத ஈ) பயன்உடைய

**II. இன எழுத்து சொற்களை நிரப்புக.** 5 × 1 = 5

11. மெத்தையினுள் இருப்பது ______________
12. வளையில் இருப்பது ______________
13. யானையிடம் உள்ளது ______________
14. குளிர்ந்த காற்று ______________
15. நகை செய்யப் பயன்படுவது ______________

III. **மனப்பாடப்பாடல்.** 4 + 2 = 6

16. ‘மூதுரை’ பாடலை அடிபிறழாமல் எழுதுக.
17. ‘விருந்து’ என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

IV. **கடிதம் வரைக.** 1 × 5 = 5

18. வங்கியில் தனது கணக்கில் உள்ள தொடர்பு எண்ணை மாற்றுவது தொடர்பாக வங்கி மேலாளருக்கு கடிதம் வரைக.

V. **எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** 7 × 2 = 14

19. சிறுவணிகப்பொருட்கள் யாவை?
20. நாம் எத்தகைய சொற்களை பேச வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?
21. அலையையும் மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?
22. நான்கு நிலங்கள் என்பவை யாவை?
23. மயங்கொலி எழுத்துகள் யாவை?
24. கண்மணியே கண்ணுறங்கு பாடலில் குறிப்பிடப்படும் 3 நாடுகள் யாவை?
25. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?
26. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?

VI. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

27. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?
28. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?
29. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?
30. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் யாவை?

VII. **நெடுவினா.** 1 × 5 = 5

31. அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

VIII. **ஆங்கில சொல்லுக்கு இணையான தமிழ் சொல்லை தருக.** 6 × 1 = 6

32. கிரெடிட் கார்டு
33. விசா
34. பேங்க்
35. பாஸ்வேர்டு
36. கரன்சி நோட்
37. டிஜிட்டல்